## மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு

# வீடுகள் கட்டுவது - மக்கள் மீண்டுவர எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - மாவட்ட ஆட்சியர்களிடம் ஆலோசனை!

**சென்னை, ஜூன் 13 –**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (11.6.2024) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற 14 மாவட்ட ஆட்சித் தலைவர்களுடனான ஆய்வுக் கூட்டத்தின் நிறைவில், மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகள் கட்டுவது தொடர்பாகவும், பாதிக்கப்பட்ட மக்கள் மீண்டுவர எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் குறித்தும், வீடுகட்டும் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் வீடுகளின் நிலை குறித்தும் வினவினார்.**

அதற்கு திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், முழுமையான சேதம் மற்றும் பகுதியாக சேதமடைந்த வீடுகள் என்று இருவகைப் படுத்தியுள்ளதாகவும், அதில் 1360 வீடுகள் முழுமையாக சேதமடைந்த வீடுகள் என்று கண்டறியப்பட்டு, ஒவ்வொரு வீட்டிற்கும் 4 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

மேலும், தேர்தலுக்கு 2 நாட்களுக்கு முன்பு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, அங்கு தங்கியிருக்கும் அனைவரும் அப்புறப்படுத்தப்பட்டு வீடுகள் கட்டும் பணி தொடங்கப்பட்டுள்ளது. அதேபோல மிக்சாம் புயலால் தொழில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மாவட்ட தொழில் மையம் மூலமாக கடன்உதவி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும், மகளிர் சுய உதவிக்குழுவினருக்கும் அவர்களின் கடனுதவி அளவினை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

**தகுதியுள்ள அனைவருக்கும் இழப்பீடு!**

தொடர்ந்து, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், காஞ்சிபுரம் மாவட்டத்தில் குன்றத்தூரில் தாலுகாவில் மிக்ஜாம் புயலால் பெரும்பாதிப்பு ஏற்பட்டது என்றும், காஞ்சிபுரம் தாலுக்காவிலும் பயிர் சேதங்கள் ஏற்பட்டது என்று தெரிவித்தார். தகுதியுள்ள அனைவருக்கும் 100 சதவீதம் பயிர் இழப்பீடு வழங்கப்பட்டுவிட்டதாகவும், அதுதவிர தற்காலிகமாக சரி செய்ய வேண்டியது, நிரந்தரமாக கட்டி கொடுக்க வேண்டியது என்று சேதமடைந்த வீடுகளை வகைப்படுத்தி அந்த வீடுகளை எல்லாம் கட்டும் பணி தொடங்கப்பட்டுவிட்டதாகவும், சிலவீடுகள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளதாக தெவித்தார். மேலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு கடனுதவிகளும் வழங்கப்பட்டுள்ளதாகவும், சான்றிழ்களை இழந்தவர்களுக்குசான்றிதழ்கள்வழங்கப்பட்டுவிட்டதாகவும் தெரிவித்தார்.

செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், பாதிப்படைந்த வீடுகளை சீர்செய்திட தேர்தலுக்கு முன்பே அனைவருக்கும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுவிட்டதாகவும், வீடுகள் கட்டும் பணி தொடங்கப்பட்டு, நிறைய வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு விட்டதாகவும், மீதமுள்ள வீடுகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவித்தார். மேலும், பாதிப்பு அடைந்த மக்களுக்கு கடன்வசதிகளும் செய்துகொடுக்கப்பட்டதாகவும், பாதிப்படைந்த பகுதிகளில் குறிப்பாக பள்ளிக்கு செல்லும் மாணவர்களுக்கு தேவையான சான்றிதழ்கள் எல்லாம் வழங்கிட சிறப்பு முகாம் நடத்தி தேவையான சான்றிதழ்கள் வழங்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 40 ஆயிரம் வீடுகள் கட்டும் பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தெரிவித்ததாவது:-

கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், கடலூர் மாவட்டத்தை பொறுத்தவரை சுமார் 11,455 வீடுகள் கட்டி முடிக்கப்பட வேண்டியுள்ளது என்றும், அதில், 1245 வீடுகள் இன்னும் தொடங்காத நிலையில் இருக்கிறது என்றும் தெரிவித்தார். கிராம அளவில் ஒரு அலுவலரை நியமித்துள்ளதாகவும், பஞ்சாயத்து செயலாளர், மேல்நிலை தொட்டி இயக்குபவர் (OHT Operator) ஆகியோருக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு அப்பணிகளை பார்வையிட வேண்டும் என்ற பொறுப்பு அளித்திருப்பதாகவும் தெரிவித்தார்.

**மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்!**

மேலும், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பணிகளை முழுவதும் கண்காணிக்கிறார்கள். இவர்கள் பணிகுறித்த ஆய்வுக் கூட்டம் 2 வாரத்திற்கு ஒருமுறை மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடைபெறுகிறது என்றும் பணிகள் விரைவுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், நாகப்பட்டினம், மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும் சுமார் 6000 வீடுகள் கட்டி முடிக்கப்பட வேண்டியுள்ளது என்றும், இலக்கு நிர்ணயிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று தெரிவித்தார். மேலும், வாரந்தோறும் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டு பணிகளில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு வருவதாகவும், பணிகள் விரைவில் முடிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், மயிலாடுதுறை மாவட்டத்திற்கு 33,000 வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், கிராம பஞ்சாயத்து அளவில் நேரடியாக சென்று அப்பகுதிகளிலுள்ள கிராம பஞ்சாயத்து தலைவர்களை அழைத்து கூட்டம் நடத்தி அவர்களது தேவைகள் குறித்து கேட்டறிந்து அவற்றை சரி செய்து, கொடுத்திருக்கிறோம். 5000 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு உள்ளது என்றும், இலக்கு நிர்ணயிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று தெரிவித்தார். கிராம பஞ்சாயத்து தலைவர்களிடம் நடைமுறைச் சிக்கல்கள் குறித்து கேட்டறிந்து அவற்றிற்கு தீர்வு காணப்பட்டு நிலுவையில் உள்ள வீடுகள் விரைந்து கட்டி முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று தெரிவித்தார்.

இக்கூட்டத்தின் நிறைவாக முதலமைச்சர் அவர்கள், வீட்டுவசதி இல்லாதவர்களுக்கு புதிய வீடுகள் கட்டித்தருவது அரசின் தலையாய கடமையாகும் என்றும், இதற்கு போதுமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, எனவே, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இதில் கூடுதல் கவனம் செலுத்தி இப்பணிகளை விரைந்து முடித்திட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

மேலும், மழைக்காலம் தொடங்கப் போகிறது, ஏரி, குளம், குட்டை, கண்மாய்களையெல்லாம் தூர்வாரி, குடிமராமத்துப் பணிகளை மேற்கொண்டு, மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை இப்போதே தொடங்க வேண்டும் என்றும், அந்தப் பணிகளிலும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

---

### புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகத்தினர் பெருந்திரளாக கலந்து கொள்வீர்!

# ஜூன் 15ஆம் தேதி கோவையில் முப்பெரும் விழா!

## மாவட்ட கழகச் செயலாளர் - அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!



புதுக்கோட்டை, ஜூன் 13 -

கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் முதலமைச்சர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ளும் “முப்பெரும் விழா பொதுக் கூட்டத்தில்” புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் பெருந்திர ளாக கலந்து கொள்ள வேண்டுமென புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு: வருகின்ற ஜூன் 15 ஆம் தேதி மாலை 4.00 மணியளவில் கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் வெற்றி நாயகன் தமிழ்நாடு முதல மைச்சர். கழக தலைவர் தளபதி அவர்களின் தலைமையிலும் மற்றும் கூட்டணி கட்சித் தலை வர்கள் கலந்து கொள்ளும், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற் றாண்டு நிறைவு விழா, நாற்பது நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றியளித்த தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா,

சீர்மிகு வெற்றிக்கு கழகத்தை வழிநடத்திச் சென்ற தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்குப் பாராட்டு விழா என நடைபெறும் “முப்பெரும் விழா பொதுக்கூட்டத்தில்” புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும்.

அதுசமயம், இக்கூட்டத்தில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த, மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர,பேரூர், வார்டு, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள். இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் ஒன்றிய பெருந்தலைவர்கள், துணைப் பெருந்தலைவர்கள், நகர்மன்ற தலைவர்கள், துணைத் தலைவர்கள் பேரூராட்சி மன்ற தலைவர் கள், துணைத் தலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக்குழு, ஒன்றியக் குழு உறுப்பினர்கள்.

மற்றும் நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள். முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதி நிதிகள், மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி. வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி,

பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதி திராவிடர் நலக் குழு, சிறுபான்மை யினர் நல உரிமை பிரிவு, தகவல் தொழில்நுட்ப பிரிவு அணி, சுற்று ச்சூழல் அணி, அயலக அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள். மாவட்டப் பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் கழக முன்னோடி கள், கழக தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்துக் கொள்ளு மாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

---

### சேலம் கிழக்கு மாவட்டக் கழகத்தினர் பெருந்திரளாக கலந்து கொள்வீர் !

# ஜூன் 15ஆம் தேதி கோவையில் முப்பெரும் விழா!

## மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் அறிக்கை!



சேலம், ஜூன் 13 -

கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் ஜூன் 15ம் தேதி மாலை 4.00 மணியளவில் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலும் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ளும் “முப்பெரும் விழா பொதுக் கூட்டத்தில்” சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கழக நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டுமென சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ். ஆர்.சிவலிங்கம் வேண்டுகோள் விடு த்துள்ளார்.

அது வருமாறு :

வருகின்ற ஜூன் 15ம் தேதி மாலை 4.00 மணியளவில் கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் தளபதி அவர்களின் தலைமையிலும் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ளும், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா, நாற்பது நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றியளித்த தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா, சீர்மிகு வெற்றிக்கு கழகத்தை வழிநடத்திச் சென்ற தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்குப் பாராட்டு விழா என நடைபெறும் “முப்பெரும்விழா பொதுக் கூட்டத்தில்” கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும்.

அதுசமயம், அக்கூட்டத்தில் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த, முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்றஉறுப்பினர்கள், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், வார்டு, கிளைக் கழக செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் மன்ற தலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக்குழு, ஒன்றியக் குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி,வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, இலக்கிய அணி, தொண்டரணி, தொழிலாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, தகவல் தொழில்நுட்ப பிரிவு அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, ஆகிய அணிகளின் நிர்வாகிகள். வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.



தருமபுரி மேற்கு மாவட்டக் கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் ஆலோசனைப்படி பி.பள்ளிப்பட்டி ஊராட்சிமன்ற தலைவர் திருமலாதினேஷ் ஏற்பாட்டில் பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் பி.எஸ்.சரவணன் தலைமையில் பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றியம் பி.பள்ளிப்பட்டி, ஊராட்சியில் கலைஞர் 101 நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் தருமபுரி நாடாளுமன்றத் தேர்தலில் கழக வெற்றிக்கு வாக்களித்த பொதுமக்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் கழகக் கொடியேற்றி பொது மக்களுக்கு இனிப்பு மற்றும் உணவு வழங்கும் விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் ஒன்றிய கழக துணை செயலாளர் ஜாகிதாசெரீப்,மற்றும் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

---

### சென்னை தேசிய முதியோர் நல மருத்துவமனையில்

# யோகா மற்றும் இயற்கை மருத்துவ சேவை தொடக்கம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜூன் 13 -

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (11.06.2024) சென்னை, கிண்டியில் உள்ள தேசிய முதியோர் நல மருத்துவ மையத்தில் யோகா மற்றும் இயற்கை மருத்துவ சேவையினை தொடங்கி வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

கிண்டி முதியோர் இம்மருத்துவமனையைப் பொறுத்தவரை ஒன்றிய அரசின் மருத்துவத்துறை சார்பில் இரண்டு இடங்களில் தேசிய நல மருத்துவ மையம் திறந்து வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஒன்று டெல்லியிலும், மற்றொன்று தமிழ்நாட்டிலும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

டெல்லியில் உள்ள தேசிய முதியோர் நல மருத்துவமனை டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனை கட்டிட வளாகத்தில் இயங்கி வருகிறது. ஆனால் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, 8.64 ஏக்கர் பரப்பளவில் 3,76,358 சதுர அடி பரப்பளவில் பிரத்யேகமான மருத்துவ மனை அமைக்கப்பட்டு கடந்த பிப்ரவரி மாதம் திறந்து வைக்கப்பட்டது. இம்மருத்துவமனையைப் பொறுத்தவரை 200 படுக்கை வசதிகள், 40 தீவிர சிகிச்சைப் பிரிவு படுக்கைகள், 20 கட்டணப்படுக்கைகள் இம்மருத்துவமனையில் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் கடந்த நிதி நிலை அறிக்கையில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளிலும் கட்டணப்படுக்கைகள் திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அந்தவகையில் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னாள் பொள்ளாச்சி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் கட்டணப் படுக்கைகள் திறந்து வைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் அனைவரும் அரசின் மருத்துவ சேவைகளை பெற தொடங்கி இருப்பதால் கட்டணப் படுக்கைகளுக்கு பெரிய அளவில் வரவேற்பு இருந்து வருகிறது.

அந்தவகையில் மூத்தோருக்கான மருத்துவமனையைப் பொறுத்தவரை, கட்டணம் அதிகமாக இருக்கக்கூடாது என்கின்ற வகையில் ஏழை, எளியவர்கள் கட்டணப் படுக்கை அறைகளை பயன்படுத்திக் கொள்ள ஏதுவாக ஒரு அறைக்கு ரூ.900/ என்கின்ற வகையில் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டு உணவு வசதிகளுடன் சேர்த்து இக்கட்டணம் நிர்ணயிக்க ப்பட்டு மிக மலிவான கட்டணத்தில் அறைகள் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இச்சேவையினை பொதுமக்கள் மிகச் சிறப்பான வகையில் பயன்படுத்தி வருகிறார்கள். இச்சேவை தொடங்கப்பட்டு இதுவரை சிகிச்சைப் பெற்ற புறநோயாளிகளின் எண்ணிக்கை 37,811 பேர், உள்நோயாளிகளின் எண்ணிக்கை 1,198 பேர், தீவிர சிகிச்சைப்பிரிவிலிருந்து குணமடைந்து சிகிச்சைப் பெற்று திரும்பிச் சென்றவர்களின் எண்ணிக்கை 985 பேர், இதுவரை இம்மருத்துவமனையில் 220 அறுவை சிகிச்சைகள் நடைபெற்று இருக்கிறது. 1046 சிடி ஸ்கேன்கள் எடுக்கப்பட்டுள்ளன. 761 இரத்தப் பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளது. 10,155 பேருக்கு பிசியோதெரபி செய்யப்பட்டிருக்கிறது.

இதில் மனநல சிகிச்சையில் 393 பேர் பயன்பெற்றிருக்கிறார்கள். இம்மருத்துவமனையைப் பொறுத்தவரை ரூ.1 கோடி மதிப்பிலான Essential Drugs அத்தியவாசிய மருந்துகள் கையிருப்பில் இருக்கின்றது. மேலும் இம்மருத்துவமனையில் முதியோர்கள் புத்தகங்கள் வாசிப்பதற்கு புதிய நூலகம் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் முதியோர்கள் மகிழ்ச்சியாக இருப்பதற்கு ஏதுவாக கேரம்போர்டு, செஸ், பல்லாங்குழி போன்ற விளையாட்டு உபகரணங்களும் வாங்கித் தரப்பட்டு அவர்களும் அதன்மூலம் பயன்பெற்று வருகிறார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இம்மருத்துவமனையில் யோகா மற்றும் இயற்கை மருத்துவப் பிரிவு திறந்து வைத்திருக்கிறோம். யோகாப் பயிற்சி என்பது அனைத்து வயதினருக்கும் பயன்பெறக்கூடிய ஒன்று. அந்தப் பயிற்சி குறிப்பாக முதியோர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்கின்ற காரத்தினால் யோகா மற்றும் இயற்கை மருத்துவப் பிரிவு இன்று திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. இதில் பக்கவிளைவுகள் இல்லாத சிகிச்சை வழங்கப்படுகிறது.

இதில் உபவாச கிசிச்சை, யோகா சிகிச்சை, மசாஜ் சிகிச்சை, நீரா விக்குளியல், வாழை இலைக் குளியல், மண் குளியல், காந்த சிகிச்சை, நிற சிகிச்சை, நீர் சிகிச்சை, இயற்கை உணவு சிகிச்சை, இயற்கை மூலிகை சிகிச்சை, அக்குபஞ்சர், அக்குபிரஷர், நறுமணச் சிகிச்சை மற்றும் மனநல ஆலோசனைகள் போன்ற சிகிச்சைகள் தொடங்கப்பட்டிருக்கிறது. உடலையும், உள் உறுப்புகளையும் வளம் பெறச் செய்வதற்கும், புத்துணர்ச்சி அடைய செய்வதற்கும் இதுபோன்ற சிகிச்சை முறைகள் ஏதுவாக இருக்கும்.

முதியோர்களுக்கு பொதுவாக கோபம் அதிகரித்தல், பயம் அதிகரித்தல் போன்றவை இருக்கும். கோபமும், பயமும் அதிகரிக்காமல் அவர்களை சாந்த நிலையில் வைத்துக்கொள்வதற்கு இந்தப் பயிற்சிகள் அவர்களுக்கு உதவியாக இருக்கும். வயதில் மூத்தவர்களுக்கு தசைகள் இறுக்கம் அடைந்து விடும். இறுக்கம் அடையும் தசைகளை தளர்வடையச் செய்ய வேண்டும். மூத்த குடிமக்களுக்கு தசைகளின் இறுக்கங்களை தளர்வடையச் செய்யும் சிகிச்சைகளும் தற்போது செய்யப்பட உள்ளது.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சங்குமணி, சென்னை மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.தேரணிராஜன், தேசிய முதியோர் நல மருத்துவமனை இயக்குநர் மரு.தீபா, கலைஞர் நூற்றாண்டு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை இயக்குநர் மரு. பார்த்தசாரதி, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இணை இயக்குநர் மரு.மணவாளன், மண்டலக்குழுத் தலைவர்கள் கிருஷ்ணமூர்த்தி, துரைராஜ், மாமன்ற உறுப்பினர்கள், மருத்துவப் பேராசிரியர்கள், செவிலியர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் ஆலோசனைப்படி சேலம் மாவட்டம் வாழப்பாடி ஒன்றியம் சேஷன்சாவடி அரசு உயர்நிலைப்பள்ளியில் பெற்றோர் – ஆசிரியர் சங்க தலைவரும் மாவட்ட மாணவரணி அமைப்பாளருமான முனைவர். அ.சீனிவாசன் அப்பாதுரை தலைமையாசிரியர் ஆகியோர் பள்ளிக்கு வந்த மாணவ, மாணவிகளை வரவேற்று புத்தகங்களை வழங்கினார். நிகழ்ச்சியில் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.